**அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் 2013**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமானக்கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகள் (பெறுமானத்தேய்வு கொள்கை தவிர) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது திறைசேரியால் பேணப்பட்டு வரும் பேரேட்டின் பிரகாரம் அம்புலுவாவ நம்பிக்கை நிதியத்திற்காக முன்னைய ஆண்டுகளின் மீண்டெழும் செலவினம் ரூபா 20,109,170 மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 2,600,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செலவினத்தை இனங்கண்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட மீண்டெழும் செலவினம் ரூபா 2,662,147 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டிற்கு முன்னர் நன்கொடையாக கிடைத்திருந்த 4 நீர் பம்பிகள், கை உழவு இயந்திர என்ஜினொன்றும் மின்பிறப்பாக்கி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 6,991,649 தொகையை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு ரூபா 222,820 ஆலும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு ரூபா 36,179 அலும் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்குரிய பூங்கா ஊழியர் சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 152,800 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஊ) 2009 ஒக்தோபர் முதல் 2012 திசெம்பர் 31 வரையிலும் மீளாண்வாண்டின் நிலுவை வட்டி வருமானம் முறையே ரூபா 2,309,589 மற்றும் ரூபா 750,000 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிலையான சொத்துக்கள் 05 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் ரூபா 332,580,000 கூட்டுப்பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 02 தொலைபேசி கம்பனியுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய கோபுர வருமானம் ரூபா 442,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,923,500 கூட்டுப்பெறுமதியான 02 வருமான விடயங்கள் தொடர்பாக பற்றுச்சீட்டுக்கள், வருமான பதிவேடுகள் மற்றும் செல்லுபடியான குத்தகை உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ரூபா 347,580,000 கூட்டுப்பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பன மற்றும் ரூபா 347,784,932 ஆன பொறுப்புக்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் HM-4787 மற்றும் KI-2084 ஆம் இலக்க இரண்டு வாகனங்களுக்காக ரூபா 231,150 திருத்த செலவினம் மற்றும் ரூபா 83,581 ஆன காப்புறுதி தவணைக்காக நிதியத்திற்காக பொது திறைசேரியால் செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்திற்குச் சொந்தமாக அவ்வாறான 02 வாகனங்கள் இருப்பதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 2,100,616 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு தொடர்பாக பொருட்களின் பெறுகை மற்றும் நாளாந்த வேலைத்தளத்திற்கு வழங்கிய இருப்பு, புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க திறைசேரியின் பிரதி செயலாளரின் சுற்றறிக்கையின் | |
| | i | 4.1 (அ) பிரிவு | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க வருடாந்த பாதீடொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | ii | 4.3 பிரிவு | பிரிவின் (இ) முதல் 'ஊ' வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 2,928,833 தொகையான பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டில் அடைந்திருந்த பற்றாக்குறை ரூபா 1,474,811 ஆக காணப்பட்டதால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,454,022 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3.2 வருமான நிர்வாகம்

மிகவும் கவர்ச்சிகரமான காட்சிகளுடன் கூடிய அம்புலுவாவ பல்வகைப்படுத்தல் தொகுதி கண்டி – நுவரெலியா வீதிக்கு அருகில் அமைந்திருந்த போதும் மீளாய்வாண்டில் வெளிநாட்டு 1,613 சுற்றுலா பயணிகள் மாத்திரம் வருகை தந்திருந்ததுடன் அதிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 483,900 ஆக இருந்தது. சுற்றுலா கவர்ச்சியை அதிகரிக்கும் வகையில் விரிவான பிரச்சாரமொன்றை வழங்காமை காரணமாக உழைக்கக்கூடியதாக இருந்த பாரியளவு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்புலுவாச உயிரியல் பலவகை தனிமை பிரிவின் நுழைவு இடத்தில் ரூபா 1,270,000 செலவில் (நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகளுடன் கூடிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசின் மானியங்கள் ரூபா 10,500,000 பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய 07 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டில் ரூபா 41,500 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,800,000 அரசின் மானியம் பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கபெட்டேரியா உணவு விடுதி மற்றும் அதற்குரிய பொருட்கள் வெளித்தரப்பினருக்கு வியாபார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உடன்படிக்கையொன்று இல்லாமல் வழங்கப்பட்டிருந்த போதும் அதிலிருந்து நிதியத்திற்கு எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

கூறுவிலை கோரல், கேள்வி அளிப்பு, பொறியியலாளர் மதிபபீடு தயாரித்தல், இறுதி பட்டியல் மற்றும் செய்த வேலைக்காக உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்ளல் என்பன இல்லாமல் ரூபா 4,437,872 தொகை கமநல விஹார மனைக்கு செல்லும் வீதியை விரிவாக்குவதற்கும் ரூபா 879,900 தொகை தேயிலை, தென்னை, இறப்பர் ஆராய்ச்சி நிலையத்திற்கு அண்மையில் சுவரொன்றை அமைப்பதற்கும் ரூபா 1,029,000 தொகை குறுக்கு வீதியொன்று வெட்டிவதற்காகவும் மீளாய்வாண்டின் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டிலான சொத்துக்கள்

ரூபா 10,000,000 அரசின் மானியம் பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட முழுமையான கருத்தரங்கு மண்டபமொன்று நிதியத்திடம் காணப்பட்ட போதும் முன்னை ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கருத்தரங்கு நடாத்தப்பட்டதற்கான உறுதிப்படுத்தலொன்று காணப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 04 ஆண்டு கால தாமதத்தின் பின்னர் 2018 திசெம்பர் 07 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 செயலாற்றல்**

-------------------

2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (க) வரையான 20 நோக்கங்களில் 4 விடயங்கள் தவிர ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எவ்வித நடவடிக்கையொன்றையும் எடுத்திருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் நிர்வாகம்